

திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் திருப்பத்தூர் பழைய பேருந்து நிலையத்தில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.சிவசௌந்தரவள்ளி தலைமையில் நடைபெற்ற நான்காம் ஆண்டு புத்தகத் திருவிழாவில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் க.தேவராஜி எம்.எல்.ஏ., திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை எம்.பி. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி புத்தகத் திருவிழாவை தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என்.கே.ஆர். சூரியகுமார், திருப்பத்தூர் மாவட்ட ஆவின் மு.தலைவர் எஸ்.ராஜேந்திரன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் தோல் உற்பத்தி தொழிலாளர் நலவாரிய தலைவர் நெல்லிக்குப்பம் புகழேந்தியின் தந்தை சுப்ரமணியம் அவர்களது 23 வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகரக் கழக அலுவலகத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து ஏழை மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது நிகழ்வில் ஜெயந்தி ராதாகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன், சீனு மனோகரி முருகன், ஜெயசீலன், கோ. வேலு, கதிரேசன், ஆர்.வி. விஜயகுமார், ரமேஷ், மதியழகன், ரகு, அன்பழகன், பிரபு, ராஜா, ராமு, மாறன், சபா தருமன், மணிவண்ணன், குமார், குகன், சிவகுமார், முகமது, யாசின் மற்றும் எஸ்.பி. ஸ்டாலின் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### அணைக்கட்டு தொகுதியில்

# பால் குளிர்விக்கும் மையங்கள் அமைக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் ஏ.பி.நந்தகுமார் வலியுறுத்தல்!

**சென்னை, மார்ச் 22-**

**பேரவையில் கேள்வி நேரத்தின்போது அணைக்கட்டுத் தொகுதியில் பால் குளிர்விக்கும் மையங்கள் அமைக்கப்படுமா? என்று ஏ.பி.நந்தகுமார் கேள்வி எழுப்பினார்.**



இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஏ.பி. நந்தகுமார்:** அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டு, ஒடுகத்தூர், பள்ளிகொண்டா, மற்றும் ஊசூர் ஆகிய இடங்களில் பால் குளிர்விக்கும் மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்:** அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டு, ஒடுகத்தூர், பள்ளிகொண்டா, ஊசூர் ஆகிய இடங்களில் பால் குளிர்விக்கும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார். இல்லை என்ற பதிலை நான், உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.பி.நந்தகுமார்:** திராவிட மாடல் ஆட்சியில் எல்லா துறைகளிலும் இந்தியாவில் முதன்மை இடத்தில் இருப்பதைப்போல், பால் வளத் துறையும் முதல் இடத்தை வகிக்க பால் உற்பத்தியாளர்களின் வயிற்றில் பால் வார்த்த அரசு, தலைவர் தளபதி அவர்களின் அரசாகும். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ரூபாய் 3 ஊக்கத் தொகை தந்தது தலைவர் தளபதி அரசு. தரமான கொழுப்புப் பாலைக் கொடுப்பவர்களுக்கு கூடுதலாக ஒரு ரூபாய் ஊக்கத் தொகை தந்தது தலைவர் தளபதி அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

பால் கொள்முதல் நிலையங்களிலிருந்து பெறப்படும் பாலைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் மதிப்புக்கூட்டுப் பால் பொருட்களை, அதே கொள்முதல் நிலையங்களில் குறைந்த விலைக்கு பொதுமக்களுக்கு தரமான பால் பொருட்களை வழங்குதல், இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக பால் உற்பத்தியாளர்களுக்கு பணப் பட்டுவாடா 10 நாட்களில் பைசல் செய்த அரசு தலைவர் தளபதி அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொற்கால ஆட்சி நடத்தும் தலைவர் தளபதி அரசில் அணைக்கட்டுத் தொகுதியானது கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். எனவே, அதைக் கருத்தில் கொண்டுதான் அணைக்கட்டுத் தொகுதியில் அணைக்கட்டு, ஊசூர், ஏரிப்புதூர், வெட்டுவானம், பள்ளிகொண்டா போன்ற பகுதிகளிலே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன், காரணம், வேலூருக்கு சுமார் 40, 50 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய அந்த பால் குளிரூட்டும் நிலையத்திற்குப் பாலைக் கொண்டு செல்லக்கூடிய நிலையிலே அந்த பால் கெட்டுப் போகின்றது.

ஆகவே, அமைச்சர் அவர்கள் பால் குளிரூட்டும் நிலையம் தரும் உத்தேசம் அரசுக்கு இல்லை என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்களே, பாலினுடைய முக்கியத்துவம் உங்களுக்குத் தெரியும். காலையில் எழுந்து பால் இல்லை என்று சொன்னால், அவர் இல்லை என்று சொன்னார். அது விவசாயிகள் நிறைந்த பகுதி. ஆகவே, அமைச்சர் அவர்களே, மீண்டும் மறுபரிசீலனைச் செய்து, கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குப் பால் வார்க்கக்கூடிய வகையிலே நீங்கள் அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்:** அணைக்கட்டு என்பது பெரிய தொகுதி என்பதை நான் அறிவேன். மேற்குத் திசையிலே அணைக்கட்டுப் பகுதியிலே வேலங்காடு எனும் ஒரு கிராமம் இருக்கிறது. அது ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் ஒரு கிராமம்; வல்லண்டராமம் எனும் ஒரு கிராமம் இருக்கிறது; இலவம்பாடி எனும் ஒரு கிராமம் இருக்கிறது. இவற்றிற்காக 5,000 லிட்டர் அளவுள்ள BMC என்கிற குளிர்விப்பான்கள் அந்தப் பகுதிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. முறையே 4,520 லிட்டர், 413 லிட்டர், 4310 லிட்டர், 3,260 லிட்டர் கொள்முதல் செய்கிறோம். அங்கு 5,000 லிட்டர் கொள்முதல் செய்கிறோம் என்று சொல்லுங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், அந்தக் கிராமங்களில் இல்லை என்று சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அனைத்து கிராமங்களிலும் BMC குளிரூட்டும் நிலையம் வைத்திருக்கிறோம். சில இடங்களில் தற்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர் கேட்பது எந்தெந்த பகுதிகள் என்றால், அவர் பகுதியில் பக்கத்தில் இருப்பது 5,000 லிட்டருக்குக் குறைவாகத்தான் இருக்கிறது. அதனால் எடுத்துச்சென்று கொடுக்கலாம்.

எனவே, புதியதாக அமைக்க முடியாது. ஏற்கெனவே இருப்பதைவிட அதிகமாகத் தேவைப்பட்டால், ஒரு request வைத்தால் we will consider. நாங்கள் குளிரூட்டும் நிலையம் அமைத்துக் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய அணைக்கட்டு தொகுதியானது கிராமப்புறங்கள் நிறைந்த பகுதி என்று இங்கே நான் பேசியிருக்கிறேன். அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட கணியம்பாடி வட்டாரத்தில் உற்பத்திச் செய்யப்படும் பாலுக்கு, சோழவரம், காட்டுப்புத்தூர், நாகநதி, கீழ்அரசம்பட்டு ஆகிய ஏதாவது ஒரு கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தந்தால், வேலூருக்கு முப்பது கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய அந்தப் பகுதியைக் கருத்தில் கொண்டு அங்கே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, பல இடங்களிலே பால் குளிரூட்டும் நிலையம் இருக்கின்றது என்று சொன்னார்கள். இந்த நான்கு பகுதிகளிலே பால் குளிரூட்டும் நிலையம் இல்லை. காரணம் தமிழக அரசு நல்லதொரு பாலை அங்கே வாங்குகிறார்கள். தனியார் நிறுவனங்கள் 10 கிலோ மீட்டருக்கு ஒரு இடத்தில் chilling point அமைத்துக் கொண்டு, அங்கே பாலைக் கொள்முதல் செய்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் அரசுக்குத்தான் பாலை தருவோம் என்கிற நிலையிலே இருக்கிறார்கள். அங்கே ஒரு chilling point அமைத்துத்தர வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்:** ஒடுகத்தூர் கிராமத்தில் 5,000 லிட்டர் கொள்முதல் கொண்ட மொத்த பால் குளிர்விப்பான் அமைக்கப்பட்டு, 11 கிளைச் சங்கங்களிலிருந்து பால் எடுக்கிறோம். அதில் மொத்தம் 3,990 தான் வந்திருக்கிறது. 5,000 வரை வர வேண்டும். அந்த 5,000 full ஆகிவிட்டால் மற்ற குளிரூட்டும் நிலையம் அமைக்கலாம். அதை நான் ஏற்கெனவே சொன்னேன்.

பாலுக்கு நாம் 16 ரூபாய் குறைத்துக் கொடுக்கிறோம். வெளியில் 56 ரூபாய்க்கு விற்கிறார்கள். நாம் 40 ரூபாய்க்கு பாலைக் கொடுக்கிறோம். அதற்கு ஊக்கத் தொகை 3 ரூபாய் கொடுக்கிறோம். அதற்குச் சுமார் 140 கோடி ரூபாயை நம்முடைய தலைவர் முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய consumerம் ஏழை, உற்பத்திச் செய்பவரும் ஏழை. கொஞ்சம் consider செய்ய வேண்டியிருக்கிறது. ஆவினை நஷ்டம் இல்லாமல் நடத்த வேண்டும். அதனால் பிற பொருள்களையும் விற்கிறோம். நம்முடைய அரசாங்கத்தில் அது நல்லபடியாகச் சென்று கொண்டிருக்கிறது. பழைய அரசாங்கத்தைவிட 11 இலட்சம் லிட்டர் அதிகமாகக் கொள்முதல் செய்கிறோம்;

பால் தட்டுப்பாடு இல்லை. $6\frac{1}{2}$ to $7\frac{1}{2}$ என்று time அதிகப்படுத்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. 5 to 6 என்றால் இரவு நேரமாக இருப்பதால் culprits வருகிறார்கள்,

முகம் தெரியாது என்பதால் பெண்கள் வாங்குவதற்கு ஏற்றாற்போல் நேரம் மாற்றப்பட்டிருக்கிறது. தற்போது பெண்களுக்கு எந்த வித disturbanceம் கிடையாது. அந்த boothகளுக்குச் சென்று பெண்கள் பால் வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட நல்ல ஏற்பாடுகள் அனைத்தும் செய்திருக்கிறோம்.

அவர் சொல்லும் பகுதியில் இல்லை என்று சொன்னால், உடனடியாக ஒரு letter கொடுத்தால் BMC அமைக்க ஏற்பாடு செய்து தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக அவரின் letter padல் அமைச்சருக்கு எழுதிக் கொடுக்க வேண்டும். நான் உடனடியாக forward செய்து கொடுத்து, BMC அமைத்துக்கொடுக்க ஏற்பாடு செய்ய உதவியாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## கொரடாச்சேரியில் தெருமுனைப் பிரச்சாரம்!

திருவாரூர், மார்ச் 23-

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கொரடாச்சேரி வடக்கு ஒன்றியப்பகுதிகளில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. ஒன்றிய கழக செயலாளர் சேகர் கலியபெருமாள் தலைமையில் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டத்தில் தலைமைக்கழக பேச்சாளர் சோம.இளங்கோவன், கழக இளம் பேச்சாளர் விக்னேஷ்வரி, தங்க குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்று பிரச்சார உரையாற்றினார்.

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு,திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், "தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும்", துணை முதல்வர் உதயநிதி அவர்களின் பிறந்தநாள் விழா உள்ளிட்டவைகளை முன்னிறுத்தி அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களிலும் பிரச்சார கூட்டங்கள் நடைபெற்றுவருகிறது.

மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கொரடாச்சேரி வடக்கு ஒன்றியப்பகுதிகளான காப்பனா மங்கலம் மற்றும் பவித்ரமாணிக்கம் ஆகிய இடங்களில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது.

ஒன்றிய கழக செயலாளர் சேகர் கலியபெருமாள் தலைமையில் நடைபெற்ற இந்த பிரச்சாரக்கூட்டத்தில் கொரடாச்சேரி தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.பாலச்சந்திரன், எஸ்.பி.ஜே.தாமஸ், காசிராஜன், கோவி.சந்துரு, ஒன்றிய அமைப்பாளர் மதி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் எண்கண் சா.மணி, துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், பாலமுத்து, சோமசுந்தரம், ஆசிரியர் தி.ப.செல்லத்துரை மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் கீழக்குறிச்சி ஊராட்சியில் புதிய அரசு உயர்நிலைப்பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தங்க.நாராயணசாமி அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் தலைமையாசிரியர் காமராஜ், ஆசிரியர் கருப்பையா பொதுபணித்துறை இளைநிலைப் பொறியாளர் சுபர்ணா, தொழில்நுட்ப பொறியாளர் கற்பகம் நல்லூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வேப்பூர் வ.குணசேகரன், ஊராட்சி செயலாளர் வீரமுத்து ஒப்பந்ததாரர் ரமேஷ்.மணி, குமார், பெரியசாமி, தங்கவேல், மாரிமுத்து, அய்யாவு கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### மணலூர்பேட்டை - வானாபுரம் - கள்ளக்குறிச்சி

# புதிய வழித்தட பேருந்துகளை இயக்க வேண்டும்!

## பேரவையில் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கோரிக்கை!

கள்ளக்குறிச்சி, மார்ச் 23-

மணலூர்பேட்டையிலிருந்து வானாபுரம் வழியாக கள்ளக்குறிச்சி செல்ல புதிய பேருந்துகள் இயக்க வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கோரிக்கை விடுத்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினரான வசந்தம் கார்த்திகேயன், சட்டப்பேரவையில் வானாபுரத்தை மையமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.எனவே, அந்தப் பகுதியில் உள்ள எல்.என். பட்டி, ரிஷிவந்தியம், மேலந்தல், மணலூர்பேட்டை பகுதிகளிலுள்ள பொதுமக்கள் வானாபுரம் வழியாக கள்ளக்குறிச்சி செல்வதற்கு புதிய பேருந்துகள் இயக்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், புதிதாக ஏற்படுத்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகப் பகுதிக்கு இணைப்புப் பேருந்து வேண்டுமென்று கேட்டுள்ளார். அதுகுறித்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்தார்.

### உசிலம்பட்டி நகர் தி.மு.க. சார்பாக

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## சேடபட்டி மு.மணி மாறன் -தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. - எஸ்.ஓ.ஆர். தங்கபாண்டியன் பங்கேற்பு!

மதுரை, மார்ச் 23-

மதுரை தெற்கு மாவட்டம் உசிலம்பட்டி நகர தி.மு.க. சார்பாக கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் படி மூன்று நாட்கள் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர், தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., முன்னிலையில் எஸ்.ஓ.ஆர். தங்கபாண்டியன் ஏற்பாட்டில் 1500 பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. அதன் விபரம்,

திராவிட மாடல் அரசின் நாயகர், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 72வது பிறந்த தினத்தை முன்னிட்டு உசிலம்பட்டி நகர் கழகம் சார்பாக நகர செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கபாண்டியன் ஏற்பாட்டில் வரும் 25.03.2025 செவ்வாய் கிழமை, 28.03.2025 வெள்ளிக்கிழமை, மற்றும் 30.03.2025 ஞாயிற்றுக் கிழமை மூன்று நாட்கள் உசிலம்பட்டி குரு மஹால், எம்.பி.வசந்தி மஹால், செல்வ தமிழ் அரிசி மஹால் ஆகிய இடங்களில் கிராமிய கலைஞர்கள் குடும்பத்தினர், சலவை தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் என 1500 க்கும் மேற்பட்டோருக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது.

இந்த மாபெரும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை வகிக்கிறார். தேனி நாடாளுமன்ற உறுப்பினர், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன், உசிலம்பட்டி தொகுதி பொறுப்பாளர் செல்லத்துரை, கழக மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, ஜி.பி.ராஜா மற்றும் ஒன்றிய செயலாளர்கள் முருகன், பழனி, ஜி.அஜித்பாண்டி, முத்துராமன், சுதாகரன், ஜெயச்சந்திரன், சங்கர பாண்டியன், செல்வபிரகாஷ், ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றார்கள்.

நகர அவைத் தலைவர் சின்னன் வரவேற்புரை ஆற்ற உள்ளார். மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் அருண், சிவனாண்டி, விமல், சரவணகுமார், குபேந்திரன், பி.டி.மோகன், கட்டளை விஜய், ஜெயச்சந்திரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மூத்த முன்னோடிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகராட்சி மாமன்ற உறுப்பினர்கள், நகர் கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் பிரதிநிதிகள், நிர்வாகிகள் என பெரும் திரளானோர் பங்கேற்க உள்ளார்கள். விழாவில் நகர பொருளாளர் து.கா.ஜெயப்பிரகாஷ் நன்றி உரையாற்ற உள்ளார்.

விழா ஏற்பாடுகளை நகர செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன் சிறப்பாக செய்து வருகிறார்.

### நே.சிற்றரசு – தயாநிதிமாறன் – அன்பகம் கலை – எழிலன் நாகநாதன் – வினோத் வேலாயுதம் – தூத்துக்குடி எஸ்.ஜோயேல் – வெ.கௌதமன் – பா.பிரகாஷ் பங்கேற்பு!

# ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## பகுதி இளைஞரணி அமைப்பாளர் வ.வேல்குமார் அறிக்கை!

சென்னை, மார்ச்.23-

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (23.03.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் ஸ்ரீராமபுரம் சந்திப்பு சூளைமேடு சென்னை600094 எனும் முகவரியில் நடைபெறுகிறது.

முன்னிலை : ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம்

தலைமை : வ.வேல்குமார்

வரவேற்புரை : அபித் நகர் சுரேஷ்குமார், மு. லோகநாதன், காந்தி (எ) ரா.ராஜேஷ், முரசொலி ஸ்ரீதர், ஆர்.பா.ராம்குமார்

நன்றியுரை : சீ.தனுஷ் கோடி ஆதித்தன்

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் குமரி பிரபாகர், இளம் பேச்சாளர் கோகுல், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு எம்.சி., நாடாளுமன்ற உறுப் பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக செயலாளர் வினோத் வேலாயுதம், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயேல், தொகுதி பார்வையாளர் வெ.கௌதமன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா.பிரகாஷ் இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் என்.மோகனவேல், ஜே. எம்.இம்ரான் ஆருன்,கே. குட்டி, பி.பாலச்சந்தர், வி. தினேஷ் குமார், 109அ வட்ட செயலாளர் ச. டேவிட் இன்பராஜ் ரா. பொன்னம்மாள், க.தங்கமணி, எம்.எ.ஆரோன் ஃபெலிக்ஸ், ஆர்.சாய் கிஷோர், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட நிர்வாகிகள் : து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, ஐ.கென்னடி,

பகுதி கழக நிர்வாகிகள் புவி பாலாஜி, என்.பி. இதயத்ப்பாஷா, ஸ்டெர்லிங் மோகன், பா.கமலக்கண்ணன், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள் க. சிட்டிபாபு, த. குணசேகரன், கே.எஸ். தினேஷ்பிரபு, வரதை த.பரி, மு.மோகன், மாமன்ற உறுப்பினர் எலிசபத் அகஸ்டின்பாபு,

வட்ட நிர்வாகிகள் பா.சுரேஷ்குமார், இரா. முத்துக்குமார், ஆ.விஜயகுமார், ஜி.கே.ராஜா, எஸ். மாலா, ல.வாஞ்சிநாதன் (எ) முரளி, சு.நைநியப்பன், ஆர். நீலகண்டன், என்.எஸ். சுப்பிரமணியன், ஆர்.சேகர், பி.கோவிந்தராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வ.வேல்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.




திருப்பத்தூர் தொகுதி, கந்திலி கிழக்கு ஒன்றியத்துக்குட்பட்ட வெங்களாபுரம் கிராமத்தில் 500 குடும்பங்கள் 40 ஆண்டுகளுக்கு மேலாக பட்டா இன்றி வசித்து வந்தனர். தகுதியுள்ள இந்த நபர்களின் கோரிக்கையினை ஏற்று திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி அப்பகுதிக்கு நேரில் சென்று பட்டா வழங்குவதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டி துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினார்.